செ.வெ.எண்: 762 நாள்: 29.12.2020

**அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் மருத்துவக் கனவை 7.5 சதவீதம் உள் ஒதுக்கீட்டின் மூலம் நினைவாக்கப்பட்டுள்ளது.**

**தமிழக அரசின் விலையில்லா கற்றல் உபகரணங்களை பள்ளி மாணவர்கள் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.**

**93 பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

---

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (29.12.2020) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியம், சூரியூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர்களின் மேம்பாட்டிற்காக எண்ணற்ற நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் மருத்துவக் கனவை 7.5 சதவீதம் உள் ஒதுக்கீட்டின் மூலம் நினைவாக்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி, மிதிவண்டி, பேருந்து பயண அட்டை, நோட்டுப் புத்தகம், பாடக் குறிப்பேடுகள், சீருடைகள், காலணிகள் உள்ளிட்ட 14 வகையான கல்வி உபகரணங்களை வழங்கி வருகிறது.

அதனடிப்படையில் இன்றையதினம் சூரியூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 42 மாணவர்கள், 51 மாணவிகள் என மொத்தம் 93 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. இதன்

பயனாக மாணவர்கள் தினமும் பள்ளிக்கு விரைவாக வருவதற்கு வழிவகை ஏற்பட்டுள்ளது. இதனை மாணவர்கள் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மேலும் பள்ளி மாணவர்கள் ஆசிரியர் கூறும் பாடங்களை தினமும் தவறாமல் படிக்க வேண்டும். மாணவர்கள் கல்வியுடன் சேர்த்து நற்பண்புகளையும் கற்றுக் கொள்ள வேண்டும். இதனை தவறாமல் கடைபிடிப்பதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த நபர்களாக உருவாக முடியும். எனவே தமிழக அரசின் இதுபோன்ற விலையில்லா உபகரணங்களை பெறும் மாணவ, மாணவியர்கள் இதனை உரிய முறையில் பயன்படுத்தி, கல்வி கற்று வாழ்வில் முன்னேற வேண்டும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் விராலிமலை ஊராட்சி ஒன்றியம், சூரியூர் பிச்சைதேவன்பட்டியில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் 14 வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் ரூ.4 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணறு, பைப் லைன் மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு குடிநீர் ஏற்றும் பணியினை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் பா.ஆறுமுகம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.சந்தோஷ்குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் விஜயலட்சுமி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**